**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திருமுறை என்பதன் பொருள் யாது?
2. எட்டாம் திருமுறையுள் இடம்பெற்றுள்ள இரண்டு நூல்களின் பெயர்களை எழுது.
3. சிவலிங்கம் இறை நிலையில் எவ்வகையைச் சார்ந்தது?
4. ஔவையாரின் அறநூல்களை இரண்டினைக் குறிப்பிடுக.
5. திருமால் குள்ள வடிவம் கொண்ட அவதாரம் எது?
6. ஆசாரிய ஹிருதயம் – பொருள் தருக.
7. முப்பத்தாறாயிரப்படி – அருளியவர் யார்?
8. வேதம் தமிழ் செய்த மாறன் எனப் போற்றப்படுபவர் யார்?
9. மணவாள மாமுனி அருளிய அந்தாதியின் திருநாமத்தை எழுதுக.
10. ஆக்கவேண்டியதும் போக்கவேண்டியதும் எதுவென யசோதர காவியம் குறிப்பிடுகிறது?
11. வச்சணந்தி மாலை எவ்வகை இலக்கியத்திற்கு இலக்கணம் கூறுகிறது?
12. பௌத்த சமயம் யார் காலத்தில் தமிழகத்தில் கால் கொண்டது?
13. தற்காலத் தமிழ் உரைநடையின் முன்னோடிகள் சிலரைக் குறிப்பிடுக.

14. முதல் மாலை இலக்கியம் எனக் கொள்ளத்தக்க இலக்கியம் எது?

15. இஸ்லாமிய மூலக்கொள்கைகளான தொழுகை, கலிமா ஆகியவற்றை எங்ஙனம் வழங்குவர்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. தொகை அடியார்களில் இரு குழுவினர் பெயரை எடுத்துக்காட்டுடன் தருக.
2. திருமால் அவதாரங்களின் திருநாமங்களை எழுதுக.
3. பன்னிரு ஆழ்வார்களுள் நாயக நாயகி பாவம் வேண்டாது கண்ணன் மீது கொண்ட காதலைப் பாடிய ஒரே ஒரு பெண் பாவை யார்?
4. வைணவச் சான்றோர்கள் அருளிய சிற்றிலக்கியங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
5. திருக்குறளுக்கு அடுத்து அறநூல்களில் சிறப்புப் பெறும் நூல் எது? அதன் சிறப்புக்குரிய காரணம் யாது?
6. மக்கள் நுகரும் இன்பத்தின் இயல்பைச் சூளாமணிக் காப்பியம் எவ்வாறு விளக்குகிறது?
7. மிகுராசு மாலை – நூற்குறிப்பு வரைக.
8. நீ இந்துவா? முஸ்லிமா? என்ற அப்துல் ரகுமானின் கேள்விக்குக் கடவுள் தந்த பதில் என்ன?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) பன்னிரு திருமுறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) ஆழ்வார்கள் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) வைணவ சிற்றியலக்கியங்கள் கூறும் திருமாலின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) கிறித்தவ நாடகப் படைப்புகள் குறித்து எழுதுக.

3. (அ) சமணத் தமிழ்க் காப்பியங்கள் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் சிலரைப் பற்றி விளக்குக.

❋ ❋ ❋